

திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களை ஆதரித்து திருச்சி ஆழ்வார்தோப்பு பகுதி 29 வட்டத்தில் உள்ள தெருக்களில் தொ.மு.ச. பேரவை சார்பில் மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. சார்பில் பொதுச்செயலாளர் டி.யு.சி.எஸ்.சு. பத்மநாபன் தலைமையில் வாக்கு சேகரிக்கும் பணியை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார். இரா.பூம்பொழிலன், திருச்சி சிந்தா மணி S.இராசேந்திரன், அமராவதி சதீஷ், ஜெயராமன், S.அரிதாஸ், பி.ஆறுமுகம், LPF.சுமதி, எல்லப்பன், அப்பாஸ் அன்வர்தீன்அப்துல் மஜீத்பிலால், இஸ்மாயில், யாஸின், தமிழரசன், சிவக்குமார், சுல்தான்சாலிக், சக்திவேல், திருவொற்றியூர் திருஞானம், பிரகாஷ், ரபிபாய், முகமதுரபீ உள்ளிட்ட ஏராளமானோர் வாக்கு சேகரித்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கழக வெற்றி வேட்பாளராக போட்டியிடும் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி, காங்கிரஸ் தெற்கு மாவட்ட தலைவர் மணிகண்டன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலாளர் செங்கோடன் மற்றும் பலர் உள்ளனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கழக வேட்பாளராக போட்டியிடும் விராலிமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் ஜோதிமணி எம்.பி, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், மு.பி.ம.சத்தியசீலன் ஆகியோர் உள்ளனர்.




நாமக்கல் கிழக்கு மாவட்டம், நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தி.மு.க. வேட்பாளராக போட்டியிடும் கே.பி.ராணி, கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் சாந்தியிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட தி.மு.க. அவை தலைவர் சி.மணிமாறன், நாமக்கல் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டாக்டர் பி.வி. செந்தில், ஒன்றியச் செயலாளர் வி.கே.பழனிவேல், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி துரை ஆகியோர் உடன் இருந்தனர்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.மீ.புகழேந்தி வேதாரண்யம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் கண்ணனிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் பி.வி.கே விவேக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் சிவகுருபாண்டியன் மற்றும் உதயசூரியன் ஆகியோர் உள்ளனர்.




மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கழக வெற்றி வேட்பாளராக போட்டியிடும் திருமயம் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் இராம.சுப்புராம், ஒன்றிய கழக செயலாளர்கள் அழகு சிதம்பரம், அ.அடைக்கலமணி ஆகியோர் உள்ளனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதிக்கான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கே.எஸ்.மூர்த்தி, பரமத்திவேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி கிருஷ்ணவேணியிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கல் நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நெடுஞ்செழியன், பரமத்தி ஒன்றிய கழக செயலாளர் பி.பி.தனரசு மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தி.மு.க. சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் எஸ்.பாலு குமாரபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மத்திய இணை அமைச்சரும், குமாரபாளையம் தேர்தல் பொறுப்பாளருமான செ.காந்திசெல்வன், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெப்படை ஜி.செல்வராஜ், நகர் மன்ற தலைவர் விஜய்கண்ணன், காங்கிரஸ் கட்சி நிர்வாகி பி.டி.தனகோபால் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளருமான நிவேதா எம். முருகன் தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் கீதாவிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் கழக செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம் மற்றும் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.



மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். உடன் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, மாவட்ட முன்னாள் செயலாளர் சி.ஆர்.ராமச்சந்திரன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.